# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

## டென்ஸ்ரீ கல்வி மன்றம் (கூட்டிணைத்தல்)

**டென்ஸ்ரீ கல்வி மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

*கண்டி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ திலும் அமுனுகம*
*அவர்களால் 2013, யூன் மாதம் 20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது*

*(2013, ஏப்பிறல் மாதம் 29 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

[ **252 ஆம் சட்டமூலம்** ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 8 .00** **தபாற் செலவு : 5.00**

2-PL 007360 - 350 (2013/06)

டென்ஸ்ரீ கல்வி மன்றம் (கூட்டிணைத்தல்)

## டென்ஸ்ரீ கல்வி மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

முன்னுரை.

"டென்ஸ்ரீ கல்வி மன்றம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான மன்றமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக் கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க சொல்லப்பட்ட மன்றத்துடன் தொடர்புபட்ட எல்லாக் குறிக்கோள்களையும் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்கென இலங்கையில் இதற்கு முன்னால் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும்:

அத்துடன் சொல்லப்பட்ட மன்றம் எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும், கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும், கருமங்களையும் இதுகாலவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும், சொல்லப்பட்ட விண்ணப்பத்தை அனுமதித்தல் பொது மக்கள் நன்மைக்காகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப்பெயர்.

**1**. இச்சட்டம், 2013 ஆம் ஆண்டின்    ஆம் இலக்க, டென்ஸ்ரீ கல்வி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

டென்ஸ்ரீ கல்வி மன்றத்தைக் கூட்டிணைத்தல்.

**2**. இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன்பின்னரும் (இதனகத்துப்பின்னர் "மன்றம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) டென்ஸ்ரீ கல்வி மன்றத்தின் தற்போதைய உறுப்பினர்களாகவுள்ள அல்லது இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக, இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படும் அத்தகையோரான அத்தனை ஆட்களும், (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) "டென்ஸ்ரீ கல்வி மன்றம்" என்னும் பெயர்மகுடத்தின்கீழ் இடையறாவழியுரிமை கொண்ட கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாதல் வேண்டும் ; அத்துடன் அப்பெயர்கொண்டு அது வழக்குத் தொடுக்கலாமென்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம் ; அத்துடன் அது பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், அது விரும்பியாங்கு அதனை மாற்றவும் முழுத் தத்துவமும், அதிகாரமும் உடையதாயிருத்தலும் வேண்டும்.

2-PL 007159 -50 (2013/04)

**3**. கூட்டுத்தாபனம் அமைத்துருவாக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :- கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

(அ) தற்சமயம் முன்பள்ளிக் கல்விக்கு பிரவேசிக்க முடியாதிருக்கும் கிராமிய மற்றும் போரினால் பாதிப்புக்குள்ளான பகுதிகளில் உள்ளவர்களை விசேடமாக உள்ளடக்கிய நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் முன்பள்ளிப் பாடசாலைகளை தாபித்தல் தொடர்பான முன்னெடுப்புக்களை மேற்கொண்டு அவற்றின் கல்விச் செயற்பாடுகளை பேணுதல் மற்றும் தரமுயர்த்தல் ;

(ஆ) குறைவான வருமானத்தைப் பெறும் குடும்பங்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் ஆகியோருக்கு கற்றல் மூலப்பொருட்களையும், உபகரணங்கள், கல்விவாய்ப்புக் களையும் வழங்கல் ;

(இ) விளையாட்டு மற்றும் தகவல் தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் பாடசாலைகள் மற்றும் நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு தேவைப்படும் ஒத்துழைப்பை வழங்கல் ;

(ஈ) பயிற்சிப் பட்டறைகள், விரிவுரைகள், செயலமர்வுகள், கண்காட்சிகள், திசைமுகப்படுத்தல், ஆசிரியர் பயிற்சி நிரல்கள் ஆகியவற்றை ஒழுங்கமைத்து தலைமைத்துவ பயிற்சிக்கான சந்தர்ப்பங்களை இளைஞர்களுக்கு வழங்குவதன்மூலம் சமகால சமுதாயத்தின் சவால் களுக்கு பதிலளிக்கும் பயனுறுதியான கருவியாக அறிவை மேம்படுத்தல் ;

(உ) சிங்களச் சகோதரர்களுக்கு தமிழ் மொழியும், தமிழ் சகோதரர்களுக்கு சிங்கள மொழியும் மற்றும் ஆங்கில மொழியை அனைவருக்கும் கற்பதற்கான வாய்ப்புக் களையும் ஏற்படுத்தி அதனூடாக மொழித்தடைகளை அகற்றி பல்வேறு சமூகங்களுக்கிடையே புரிந்துணர்வை

ஏற்படுத்தி அவர்களை பல்வகை சமூகங்களுக்கிடை யிலானதும் பல்வேறு கலாசாரங்களுக்கிடையிலானது மான உறவுமுறை ஒன்றுக்கு இட்டுச்செல்லல் ;

(ஊ) தொழிற்பயிற்சிகள் மற்றும் திறன் அபிவிருத்தி ஆகிய வற்றிற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்தல் ;

(எ) சுற்றாடலைப் பேணவும் மரக்கன்றுகளை நாட்டுவதற் கும் தேவையான வழக்கத்தை ஊக்குவிக்கவும் அவசிய மான விழிப்புணர்வை பிள்ளைகளில் ஏற்படுத்தி அதனூடாக நிலையான அபிவிருத்தியை ஏற்படுத்தல் ;

(ஏ) நூலக வசதிகள், தொலைக்காட்சி மற்றும் வானொலிக் கல்வி நிகழ்ச்சிகள் ஆகியவற்றை தாபித்தல் ;

(ஐ) குறைந்த வருமானத்தைக்கொண்ட குடும்பப் பின்னணி யைக்கொண்ட பிள்ளைகளுக்கு கண், இரத்த தானம் மற் றும் மருத்துவம் தொடர்பான முகாம்களை நடாத்துதல்;

(ஒ) மேலே குறிப்பிடப்பட்ட குறிக்கோள்களை நிறைவேற்றும் முகமாகத் தேவையான நன்மைபயக்கும் அல்லது கருதப்படும் வேறு விடயங்களை மேற்கொள்ளல் ;

**4**. இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத் தினதும் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள் களை அல்லது அவற்றின் ஏதேனுமொன்றை மேம்படுத்துவதற்கு அல்லது முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான எத்தன்மையானதுமான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும், காரியங் களையும் செய்யவும், புரியவும், நிறைவேற்றவும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும். இத்தத்துவங்களுள் வங்கிக் கணக்குகளைத் தொடங்குதல், செயற்படுத்தல், முடிவுறுத்தல் என்பனவற்றுக்கும், பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப் பொறுப்பின்றி பணம் கடன்பெறுவதற்கும் அல்லது திரட்டு வதற்கும், மானியக்கொடைகளை அல்லது நன்கொடைகளைப் பெறுவதற்கும் அல்லது சேகரிப்பதற்கும், அதன் நிதிகளை

கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.

முதலீடு செய்வதற்கும், கூட்டுத்தாபனத்தால் வைத்திருக்கப்படும் ஏதேனும் கட்டிடத்தை அல்லது கட்டமைப்பை நிறுவுவதற்கும் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான அலுவலர்களையும் சேவையாளர்களையும் வேலையிலீடுபடுத்தல், வேலைக்கமர்த்தல், வேலையிலிருந்து நீக்கல் என்பவற்றுக்குமான தத்துவமும் அடங்கும்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

**5**. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், அப்போதைக்கு வலுவிலுள்ள கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைய, அதன் விதிகளுக்கிணங்கத் தேர்ந்தெடுக்கப்படும் தவிசாளர், முகாமைப் பணிப்பாளர், செயலாளர், பொருளாளர் உட்பட ஆறு பேருக்கு மேற்படாத உறுப்பினர்களைக்கொண்ட நிறைவேற்றுப் பொறுப் பாளர் சபையொன்றினால் நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது முகாமைச் சபை இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு உடனடியாக நேர்முந்திய நாளன்று பதவி வகிக்கின்ற மன்றத்தின் முகாமைச் சபையாதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**6**. (1) ஏதேனும் பொதுக்கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக் களிக்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கினருக்குக் குறையாதோரின் வாக்குப் பெரும்பான்மை கொண்டு பின்வரும் கருமங்கள் எல்லாவற்றுக்கும் அல்லது அவற்றில் எவற்றுக்கும் இச்சட்டத்தின் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளை ஆக்குதல் கூட்டுத்தாபனத்திற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :-

(அ) முகாமைச் சபையின் பதவிதாங்குநர்களைத் தேர்ந் தெடுத்தல், பெயர் குறித்தல் மற்றும் நியமித்தல் அத்துடன் அவர்களின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள் ;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்களின், முகவர்களின் அத்துடன் சேவையாளர்களின் நியமனம், அவர்களின் தத்துவங்கள், கடமைகள், பணிகள் நியதி நிபந்தனைகள் ;

(இ) கூட்டுத்தாபனத்தினதும் சபையினதும், கூட்டங்களைக் கூட்டுவதிலும், நடாத்துவதிலும் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறையும் அதற்கான கூட்ட நடப்பெண் உட்பட அத்துடன் அதில் அலுவல்களை நடாத்துதல் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தினதும் சபையினதும் உறுப்பினர் களுக்கான தகைமையும், தகைமையீனமும் ; அத்துடன்

(உ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும் முகாமைப்பொறுப்பு மற்றும் அதன் நிதி தொடர்பான கணக்குளைக் கொண்டு நடாத்துதல் ;

(ஊ) அதன் குறிக்கோள்களை எய்துவதற்காகக் கூட்டுத்தாப னத்தை நிருவகித்தலும் முகாமை செய்தலும்.

(2) கூட்டுத்தாபனத்தால் ஆக்கப்படும் விதிகள், அதேபோன்ற கூட்டத்திலும் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்படும் விதியொன் றாற்போன்று அதேமுறையிலும் திருத்தப்படலாம், மாற்றப்பட லாம், அதற்கெதுவும் சேர்க்கப்படலாம் அல்லது அது இல்லா தொழிக்கப்படலாம்.

(3) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று வலுவிலிருக்கும் நிறுவகத்தின் விதிகள், அவை, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத் தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத அளவுக்கு இப்பிரி வின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் எல்லா நேரங்களி லும் இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளுக் கமைந்தோராதல் வேண்டும்.

மன்றத்தினால் செலுத்தப் படற்பாலனவும் மன்றத்திற்கு செலுத்தப்பட வுள்ளதுமான கடன்கள்.

**7**. இச்சட்டம் நடைமுறைக்கு வரும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று மன்றத்தின் எல்லாக் கடன்களும் பொறுப்புக்களும் இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தினால் கொடுத்துத் தீர்க்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்திகதி யன்று மன்றத்திற்கு வருமதியாகவுள்ள கடன்கள், உதவுதொகை கள், ஒப்பப்பணங்கள் ஆகியன இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனம் அசைவுள்ள அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம்.*

**8.** ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை அல்லது இறுதிவிருப்பாவணக் கையளிப்பின் மீது அல்லது வேறு வகையாகக் கூட்டுத்தாபனத்துக்கு உரித்தாக வரக்கூடிய ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை, ஒன்றில் பயன்பெறும் சொந்தக்காரராக அல்லது நம்பிக்கைப் பொறுப்பாளராக அல்லது வேறுவகையாக எடுக்கவும் வைத்திருக்கவும் கூட்டுத்தாபனம் ஆற்றலுடையதாதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய எல்லா ஆதனங்களும் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கமையவும் அத்துடன் தொடர்புபட்ட கையாளுகைச் சாசனத்தின் ஏற்பாடுகளுக்கும், நிபந்தனைகளுக்கமையவும் அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்து மாற்ற, வில்லங்கத்துக் குட்படுத்த அல்லது பொறுப்பிக்கவுள்ள முழுத்தத்துவத்துடன் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**9.** கூட்டுத்தாபனத்தின் இலட்சினையானது அதன் விதிகளுக்கிணங்க அதிகாரமளிக்கப்பட்டவாறான அத்தகைய உறுப்பினர் ஒருவரினது முன்னிலையிலன்றி, எத்தன்மையினதுமான சாசனமெதிலும் பொறிக்கப்படுதலாகாதென்பதுடன் அவர்கள் தாங்கள் சமுகமாயிருந்ததற்கு அடையாளமாக அச்சாசனத்தில் தங்களது பெயர்களை எழுதி ஒப்பமிடுதல் வேண்டுமென்பதுடன், அவ்வாறு ஒப்பமிடுதலானது எவரேனும் ஆள் சாட்சியாக ஒப்பமிடுவதிலிருந்தும் தனிவேறானதாதலும் வேண்டும்.

*குடியரசினதும் ஏனையோரினதும் உரிமைகளைப் பேணுதல்.*

**10.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும், குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட ஏதேனும் குழுவினது உரிமைகளையேனும் அல்லது இச்சட்டத்தில் குறிப்பிடப்படுகின்றவர்களும், அவர்கள் மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமை கோருகின்றவர்களும் தவிர்ந்த வேறெவரேனும் ஆட்களின் உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**11.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*